# 1.1.2017 முதல் ஊதிய உயர்வு கோரி போராடும்
# பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கு மத்திய தொழிற்சங்கங்கள் ஆதரவு
## தொ.மு.ச. பேரவை – சி.ஐ.டி.யு. – ஏ.ஐ.டி.யு.சி. – எச்.எம்.எஸ். – ஐ.என்.டி.யு.சி. தலைவர்கள் பங்கேற்பு

தபால் தந்தி இலாகாவாக இருந்த நிலையில் ஊழியர்கள் எதிர்ப்பையும் மீறி பென்ஷன் உள்ளிட்ட மத்திய அரசின் பலன்களை தருவதாக அவர்களை சம்மதிக்க வைத்து 1.10.2000–லிருந்து பி.எஸ்.என்.எல். நிறுவனமாக மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 3வது ஊதிய மாற்றம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1.1.2017லிருந்து வழங்கப்பட வேண்டிய நிலையில் அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளது. மத்திய அரசு ஊழியர்களுக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு வழங்கப்பட வேண்டிய 7வது மத்திய சம்பளக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று 1.1.2016க்குரிய ஊதிய மாற்றத்தை ஜூலை 2016 லேயே வழங்கி விட்டது இங்கே குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் பாராமுகத்தை கண்டிக்கும் வண்ணம் பல்வேறு போராட்டங்கள், மனிதச் சங்கிலி போராட்டம் போன்றவற்றின் தொடர்ச்சியாக 2017 டிசம்பர் 12, 13 தேதிகளில் அகில இந்திய அளவில் வேலை நிறுத்தத்தில் பி.எஸ்.என்.எல். ஊழியர்கள்/ அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு ஈடுபட்டது. ஆனால் மத்திய அரசு கண்டு கொள்ளாமல் பிரச்சினையை காலம் தாழ்த்தும் நிலையை கடைப்பிடிக்கிறது. 3வது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று மத்திய அரசின் நிதியுதவியின்றி அதிகாரிகளுக்கு 15 சதவிகிதம் ஊதிய மாற்றம் செய்திட பி.எஸ்.என்.எல். நிறுவனம் பரிந்துரைத்தும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஊழியர்களுக்கான ஊதிய மாற்றத்துக்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள் நவம்பரில் கொடுக்கப்பட்டும் பேச்சுவார்த்தைக்கான குழுவை அமைக்காமல் காலம் தாழ்த்துகிறது மத்திய அரசு. பல்வேறு போராட்டங்களை நடத்தியும் கண்டு கொள்ளாத மத்திய அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்து பி.எஸ்.என்.எல்.லில் உள்ள அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு கடந்த 30.1.2018 லிருந்து சத்தியாகிரக மற்றும் உள்ளிருப்புப் போராட்டங்களை நடத்தி வருகிறது.

மத்திய அரசைக் கண்டித்தும் 3வது ஊதிய மாற்றத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரியும், பி.எஸ்.என்.எல். நிறுவனத்திலிருந்து கோபுரங்களை அகற்றி தனி கோபுர நிறுவன உருவாக்கத்தை எதிர்த்தும் அனைத்து பி.எஸ்.என்.எல். ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மத்திய தொழிற்சங்கங்களான LPF, HMS, CITU, AITUC, INTUC போன்றவை நாளை (2.2.2018) அன்று போராட்டத்தில் கலந்து கொள்கின்றன.

தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் திரு. மு.சண்முகம், எச்.எம்.எஸ். தலைவர் சி.ஏ.ராஜாஸ்ரீதர், சி.ஐ.டி.யு. தமிழ்நாடு மாநில பொதுச்செயலாளர் திரு. ஜி.சுகுமாறன், ஏ.ஐ.டி.யு.சி. தமிழ்மாநில செயலாளர் திரு. டி.எம்.மூர்த்தி, ஐ.என்.டி.யு.சி, தமிழ்மாநில செயலாளர் திரு. சேவியர் ஆகியோர் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள பி.எஸ்.என்.எல். தலைமை அலுவலக வளாகத்தில் 2.2.2018 (வெள்ளி) மதியம் 1 மணி அளவில் கலந்து கொண்டு உரையாற்று கின்றனர்.

---

**பி.எஸ்.என்.எல். அனைத்து அதிகாரிகள் / ஊழியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு**